**<u>நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.எண். 44/2018</u>**

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.6வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.அலமேலு, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஷ் | வயது | 43 |
| த.பெ.(அ)க.பெ. | சகாதேவன் | தொழில் | துணை நிலைய மேலாளர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | கோயம்புத்தூர் | சமயம் | |
| வட்டம் | கோயம்புத்தூர் | சாதி | |
| மாவட்டம் | கோயம்புத்தூர் | | |

**<u>முதல் விசாரணை</u>. எதிரி ஆஜர்.**

நான் தற்போது இந்திய ரயில்வேயில் கோயம்புத்தூர் ரயில்வே நிலையத்தில் துணை நிலைய மேலாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 01.11.2017 ல் சென்னை சென்ட்ரலிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் சேரன் விரைவு ரயிலில் பயணச்சீட்டு பரிசோதகராக பணியிலிருந்தபோது மேற்படி வண்டி சேலம் தாண்டி போகும்போது அதிகாலை சுமார் 2.00 மணியளவில் அந்த வண்டியில் எஸ்.9 பெட்டி இருக்கை எண்.71 ல் பயணம் செய்த செந்தில்முருகேசன் என்பவர் இறங்கும்போது என்னிடம் வந்து அவருடைய பை காணாமல் போனதாக சொன்னார். அதனால் நான் அவரை ஈரோடு இருப்புப்பாதை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்படி சொன்னேன். அதன்படி அவர் ஈரோடு இருப்புப்பாதை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக ஜோலார்பேட்டை இருப்புப்பாதை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் எந்த இடத்தில் பொருள் திருடப்பட்டது என்று என்னிடத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். திருடிய நபர் குறித்த அடையாளமும் என்னிடத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி திருடு சம்பவத்தை செய்தது யார் என்றே தெரியாது என்றுதான் என்னிடத்தில் செந்தில்முருகேசன் என்பவர் சொன்னார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை-** இல்லை

சாட்சியின் கையொப்பம்